www.Padasalai.Net Chengalpattu District www.TrbTnpsc.com

வகுப்பு : 11

தேர்வு எண் | | | | | | |

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024

நேரம் : 3.00 மணி | **பொருளியல்** | மொத்த மதிப்பெண்கள் : 90

பகுதி – I

குறிப்பு : I) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 20X1=20

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. பொருளாதாரத்தின் தந்தை யார்?
அ) மாக்ஸ் முல்லர் ஆ) ஆடம் ஸ்மித் இ) கார்ல் மார்க்ஸ் ஈ) பால். அ. சாமுவேல்சன்

2. விற்பனை செய்யும் பொருட்களை எதனால் பெருக்கினால் மொத்த வருவாய் கிடைக்கும்?
அ) விலை ஆ) மொத்தச் செலவு
இ) இறுதி சமநிலை வருவாய் ஈ) இறுதி சமநிலை செலவு

3. இயல்பெண் பயன்பாட்டு ஆய்வை வழங்கியதில் முதன்மையானவர்
அ) ஜே.ஆர்.ஹிக்ஸ் ஆ) ஆர்.ஜி.டி.ஆலன் இ) மார்ஷல் ஈ) ஸ்டிக்லர்

4. நவீன பொருளியல் வல்லுனர்களின் விதி
அ) வளர்ந்து செல் விகித அளவு ஆ) குறைந்து செல் விகித அளவு
இ) மாறா விகித அளவு ஈ) மாறும் விகித அளவு

5. இறுதி நிலை உற்பத்தி (MP) யைக் கணக்கிடப் பயன்படும் வாய்ப்பாடு --------
அ) ΔTP/n ஆ) TP/Δn இ) TP/MP ஈ) TP/n

6. வெளியுறு செலவுகள் மற்றும் உள்ளுறு செலவுகளின் கூடுதல் -------- செலவாகும்.
அ) சமூக ஆ) பொருளாதார இ) பண ஈ) மாறா

7. இறுதிநிலை வருவாய் என்பது ஏற்கனவே உள்ள ------- உடன் கூடுதலாக பெறுவது.
அ) மொத்த விற்பனை ஆ) மொத்த வருவாய் இ) மொத்த உற்பத்தி ஈ) மொத்தச்செலவு

8. முற்றுரிமை போட்டி -------- ஆகும்.
அ) சில்லோர் முற்றுரிமை ஆ) இருவர் முற்றுரிமை இ) நிறைகுறை போட்டி ஈ) முற்றுரிமை

9. தேசிய அங்காடிக்கு எடுத்துக்காட்டு ------- ஆகும்.
அ) காய்கறி ஆ) செய்தித்தாள் இ) காப்பித்தூள் ஈ) தங்கம்

10. போலிவாரம் இதனால் தோன்றுகிறது.
அ) மனிதன் உருவாக்கிய உபகரணங்கள் ஆ) வீட்டில் தயார் செய்தவை
இ) இறக்குமதிப் பொருட்கள் ஈ) எதுவுமில்லை

11. தேசிய வளர்ச்சிக் கழகத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?
அ) டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் ஆ) ஜவஹர்லால் நேரு
இ) டாக்டர் இராதாகிருஷ்ணன் ஈ) V.K.R.V இராவ்

12. இரயத்வாரி முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட இடம்
அ) கேரளா ஆ) வங்காளம் இ) தமிழ்நாடு ஈ) மகாராஷ்டிரா

13. வருடாந்திரத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட ஆண்டு
அ) 1989-1991 ஆ) 1990-1992 இ) 2000-2001 ஈ) 1981-1983

14. நிதித்துறை சீர்திருத்தங்கள் முக்கியமாக --------- துறைக்கானது.
அ) காப்பீட்டுத் துறை ஆ) வங்கித்துறை இ) அ மற்றும் ஆ ஈ) போக்குவரத்துத் துறை

15. ஊரக தொழிற்சாலைக்கான உதாரணம் தருக.
அ) சர்க்கரை ஆலைத்தொழில் ஆ) பாய் தயாரிக்கும் தொழில்
இ) சிமெண்ட் தொழில் ஈ) காகிதத்தொழில்

16. பயிர் உற்பத்தியில் எந்தப் பயிரைத் தவிர தமிழ்நாடு முன்னணியில் உள்ளது?
அ) வாழைப்பழம் ஆ) தேங்காய் இ) தோட்டப்பயிர்கள் ஈ) ஏலக்காய்

17. ------- ஆம் ஆண்டில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
அ) 12th பிப்ரவரி 2016 ஆ) 12th பிப்ரவரி 2017 இ) 18th பிப்ரவரி 2016 ஈ) 18th பிப்ரவரி 2017

18. மனித வளர்ச்சிக் குறியீட்டில் தமிழ்நாட்டின் தரம்
அ) 2 ஆ) 4 இ) 6 ஈ) 7

19. ------- தொழிற்சாலை ஒரு வேளாண் சார்ந்த தொழிற்சாலை ஆகும்.
அ) சிமெண்ட் ஆ) இரும்பு எஃகு இ) சர்க்கரை ஈ) மின் விசிறி

20. சாராத மாறியின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் காரணமாக சார்ந்த மாறியின் மதிப்பில் ஏற்படும் கூடுதல் முறை மாற்றம் ------ எனப்படும்.
அ) சாய்வு விகிதம் ஆ) வெட்டு இ) மாறுபாடு ஈ) மாறிலி



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com CamScanner

பகுதி – II

குறிப்பு : i) ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7x2=14
ii) வினா எண்.30க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

21. பண்டங்கள் என்றால் என்ன?
22. பயன்பாட்டை வரையறு.
23. அளிப்பு கோடு மேல்நோக்கி செல்வதன் காரணம் என்ன?
24. மாறாச் செலவு என்றால் என்ன?
25. உபரி சக்தி விளக்குக.
26. நீர்மை விருப்பத்தின் பொருள் யாது?
27. LPG கொள்கையை செயல்படுத்த காரணம் என்ன?
28. மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) வரையறு.
29. அளிப்பு சார்பு கொடுக்கப்பட்டுள்ளபோது அளிப்பு நெகிழ்ச்சி காண சூத்திரம் என்ன?
30. மனித மேம்பாட்டுக் குறியீட்டெண் (HDI) மற்றும் வாழ்க்கைத் தரக்குறியீட்டெண் (PQLI) ஆகியவற்றை வேறுபடுத்துக.

பகுதி – III

குறிப்பு : i) ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7x3=21
ii) வினா எண்.40க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

31. "என்ன உற்பத்தி செய்ய வேண்டும்" என்பதற்கான முக்கிய முடிவுகள் யாவை?
32. மொத்த, சராசரி, இறுதிநிலை உற்பத்திகளுக்கு இடையே உள்ள தொடர்பினை கூறுக.
33. நீண்டகால செலவு வளைகோட்டை தக்க வரைபடத்துடன் விளக்குக.
34. நிறுவனம் மற்றும் தொழிற்சாலைக்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை.
35. காத்திருத்தல் வட்டிக் கோட்பாட்டை எழுதுக.
36. நலப்பொருளாதாரம் பற்றி அமர்த்தியாசென்னின் கருத்துக்களை எழுதுக.
37. புதிய வர்த்தகக் கொள்கையின் சாராம்சத்தை விளக்குக.
38. ஊரக மேம்பாட்டின் முக்கியத்துவம் கூறுக.
39. தமிழ்நாட்டின் ஜவுளித்துறை முன்னேற்றம் பற்றி விவரி.
40. கணித முறையின் பொருளாதார பயன்பாடுகளை விளக்குக.

பகுதி – IV

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7x5=35

41. (அ) பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.
(அல்லது)
(ஆ) ஊரக பொருளாதாரத்தின் பிரச்சனைகளை ஆராய்க.

42. (அ) குறைந்த செல் இறுதிநிலை பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரி.
(அல்லது)
(ஆ) தொழிற்கொள்கை தொடர்பாக இந்திய அரசு மேற்கொண்ட முயற்சிகளை விளக்குக.

43. (அ) அகச்சிக்கனங்கள் மற்றும் புறச்சிக்கனங்களை விவரி.
(அல்லது)
(ஆ) பொருளாதார முன்னேற்றத்தில் சிறு தொழில் நிறுவனங்களின் பங்கினை விவரி.

44. (அ) பல்வேறுபட்ட விலை நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கிடையேயான தொடர்பை விளக்குக.
(அல்லது)
(ஆ) மக்கள் தொகையின் தரமான அம்சங்களை விவரி.

45. (அ) சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக.
(அல்லது)
(ஆ) பசுமைப்புரட்சியின் சாதனைகளை விவரி.

46. (அ) இறுதிநிலை உற்பத்தித்திறன் பகிர்வுக் கோட்பாட்டை விளக்குக.
(அல்லது)
(ஆ) $P_d = 1600 - x^2$, $P_s = 2x^2 + 400$ ஆகியவை தேவை மற்றும் அளிப்பு சமன்பாடு எனில், சமநிலைப் புள்ளியில் நுகர்வோர் உபரி மற்றும் உற்பத்தியாளர் உபரி மதிப்பு காண்.

47. (அ) இந்தியப்பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரி.
(அல்லது)
(ஆ) தேவையை தீர்மானிக்கும் காரணிகளை விவரி.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
CamScanner